ஆசிரியர்: ஏ.கஜன் B.A-Tam (Cont..)
TP: 077 2400 707

# அலகு ரீதியான பரீட்சைத் தொடர்

## அலகு: 1 ஆசியப் பிரதேசம்

தரம் 09

புவியியல் I
Geography

ஒரு மணித்தியாலம்
One hour

A/L Geography ACCOUNTING WORLD 2 ஆம் குறுக்கு வீதி, மல்லாவி | இனிது கல்வி நிலையம் பாவிநகர், வவுனிக்குளம் | Personal & Group Class 6-11 - TAMIL A/L - GEOGRAPHY

**புவியியல் II**

பரீட்சைத் தொடர்
Examination Series 1

**கவனிக்க:**
* இவ் வினாத்தாளில் எல்லாமாக **ஐந்து** வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* **முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மாத்திரம்** விடையெழுதுக.
* இவ் வினாத்தாளுக்குரிய **புள்ளிகள் 40** ஆகும்.

..................................................................

**01.** கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் A – M வரையான ஆங்கில எழுத்துக்களால் இனங்காட்டப்படும் பகுதிகளைச் **சரியாக** இனங்கண்டு எழுத்துக்களை அடைப்புக்குள் எழுதுக.




| | | | |
|---|---|---|---|
| **1.** இமயமலை | (......) | **6.** குவாங்கோ ஆறு | (......) |
| **2.** ஜப்பான் | (......) | **7.** கஸ்பியன் கடல் | (......) |
| **3.** பாரசீகக் குடா | (......) | **8.** பாக்கிஸ்தான் | (......) |
| **4.** மும்பை | (......) | **9.** ஆர்ட்டிக் சமுத்திரம் | (......) |
| **5.** சுயஸ் கால்வாய் | (......) | **10.** ஹொக்கோஸ் மலை | (......) |

**(10 X 1 = 10 புள்ளிகள்)**

**02.** **(1)** ஆசியாவின் சார்பு அமைவிடத்தைக் குறிப்பிடுக.

**(2)** ஆசியாக் கண்டத்தினை, ஐரோப்பாவிலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் வேறுபிரிக்கும் எல்லைகள் **நான்கு** தருக.

**(3)** ஆசியப் பிரதேசம் கொண்டிருக்கும் பௌதிக **மற்றும்** மானிட அடிப்படையிலான **மூன்று** சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டு, **ஒன்றினை** விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**03.** **(1)** பிரதான காலநிலை வலயங்களினுள், ஒன்றுக்கொன்று வேறுபட்ட உப காலநிலை வலயங்களைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

**(2)** ஆசியாக் கண்டத்திலுள்ள பிரதான காலநிலை வலயங்களையும், அவற்றில் ஏதாவது **ஒன்றில்** நிலவும் உப காலநிலை வகைகளையும் குறிப்பிடுக.

**(3)** மேலே **வினா (2)** இல் நீர் குறிப்பிட்ட பிரதான காலநிலை வலயங்களில் **ஒன்றினைப்** பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.

- காலநிலை
- தாவரமும் விலங்குகளும்
- தாவர இசைவாக்கத்திற்கான காரணம்

**(10 புள்ளிகள்)**

**04.** **(1)** ஆசியாக் கண்டத்தில் சனத்தொகை கூடிய **இரண்டு** வலயங்களைப் பெயரிடுக.

**(2)** சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணிகள் **நான்கு** தருக.

**(3)** ஆசியாவில் சனத்தொகை அதிகளவில் பரம்பிக் காணப்படும் **மூன்று** ஆற்றுப் பள்ளத்தாக்குகளைக் குறிப்பிட்டு, அப் பள்ளதாக்குகளில் சனத்தொகை அதிகளவில் பரம்பியிருப்பதற்கான காரணங்களை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**05.** **(1)** ஆசியாவின் பிரதான கைத்தொழில் நாடாக ஜப்பான் முதன்மை பெறுவதற்கான **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

**(2)** சேவை மையமாக விளங்கும் டுபாய் முன்னெடுத்துச் செல்லும் நான்கு சேவைக் கைத்தொழில்களைப் பெயரிடுக.

**(3)** ஆசியாவின் பிரதான விவசாய நாடாகப் பாக்கிஸ்தான் முக்கியம் பெறுவதற்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிட்டு, **அவற்றுள்** ஒன்றினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

A.Kajan - A.Kajan